**கடற்றொழிலாளர் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்புத் திட்டம் - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கடற்றொழிலாளர் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்புத் திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து கடற்றொழிலாளர் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத் திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்று உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அதனுடன் சம்பந்தப்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கல்லூரியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது கல்லூரியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் எனபவற்றிற்கு முகாமைத்துவத்தும் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வது எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாரள அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோளாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ் கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மெற்கொள்ளப்படும் பொருளதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்கு செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காயிவின் பகுதியொன்றாக, கணக்காயிவின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீட்டு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றை கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குற்ப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது

நிலைமைகளுடன் தொடர்புடைய பொருன்மையான நிச்சியமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணப்பாய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாக காணப்டுகின்றன. எவ்வாராயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கல்லூரியின் தொடர்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதினை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பினிவரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள், மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிமைக்கப்பட்ருபடபதனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக செய்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்மான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்க பூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| குறித்த நியமத்துடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசு |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் 59 ஆம் பந்தியின் பிரகாரம் சுழற்சியான பங்களிப்பாளர்கள் மற்றும் ஓய்வுபெற்ற மீனவர்களின் ஓய்வூதிய பொறுப்புக்காக ஆயுட்கால மதிப்பீடானது | 2007 ஆம் ஆண்டின் போது ஓய்வூதிய முன்மொழிவு திட்டத்தின் பொறுப்புகள் தொடர்பாக மேற் கொள்ளப்பட்ட ஆயட்கால காப்பீட்டு மதிப்பீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஓய்வூதியப் பொறுப்பு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்த ஓய்வூதியத் திட்டமானது சுய நிதியை அடிப்படையில் | ஓய்வூதியப் பொறுப்புகளுக்காக ஆயுட்கால கால மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2007 ஆம் ஆண்டின் பின்னர் அது மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. 2007 ஆம் ஆண்டிற்குரிய ஓய்வூதிய பொறுப்பு நிதியேற்பாடு ரூபா 1,242,006,539 ஆன போதிலும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அவ்வாறான ஆயுட்கால மதிப்பீடொன்றினை மேற்கொள்ளாது ஓய்வூதிய பொறுப்பு ரூபா 3,195,569,738 ஆக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்படாத காரணத்தினால் எதிர்காலத்தில் இத் திட்டத்தினை மீளமைப்புச் செய்து உரிய முறைப்படி பொறுப்பினை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.<br><br>இதுவரையிலும் ஓய்வூதிய முன்மொழிவு முறையில் விரிவாக்கம் நியாயமான பங்களிப்பொன்று ஓய்வூதிய பங்களார்களிடமிருந்து பெற்றுக்கொள்வதற்குரிய கலந்துரையாடல் கடற்தொழில் அமைச்சு மற்றும் சபை ஆகியவற்றுக்கிடையே இடம்பெற்றவாறு உள்ளது. அதன் பிரகாரம் எதிர்காலத்தில் உரிய முறையில் கடற்றொழில் ஓய்வூதிய முறைமையொன்றினை தயாரிப்பதற்கு இயலும் என கருதப்படுகின்றது. | |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசு |
|---|---|---|
| 2011 சனவரி முதல் 2016 திசெம்பர் வரையான காலப்பகுதிக்கு உரியதாக ஓய்வூதியத்தினை கோரிய 121 மீனவர்களுக்கு உரித்துடைய செலுத்தப்படாத ஓய்வூதியங்களின் ரூபா 3,685,792 கூட்டுத்தொகை செலுத்தியதாக கருதி செலுத்த வேண்டிய கணக்கிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. இதன் காரணமாக செலுத்த வேண்டிய கணக்கு இந்த அளவினால் குறைவடைந்திருந்தது. | கணக்காய்வினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள அந்த கணக்கீட்டு வழுவினை திருத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உத்தேச புதிய ஓய்வூதிய முறைமையினை தயாரிக்கும் போது இந்த வழுக்களை தவிர்ப்பதற்கு உரிய தொழில்நுட்பம் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறையினை அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றேன். | சரியாக கணக்கு வைக்க எடுக்க வேண்டும். |

### 1.5.3 திட்டத்தின் தொடரந்தியங்கும் நிலை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசு |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளபடியான முன்மொழிவு முறைமையில் ஓய்வுதிய பொறுப்பு ரூபா 3,915,569 ஆக இருந்ததுடன் அது கடந்த வருடத்தை விட 9.04 சதவீதமான அதிகரிப்பு ஆகும். அவ்வாறே திரண்ட நிதியத்தின் மறை நிலைமையானது ரூபா 3,288,940,708 வரையிலும் அதாவது கடந்த வருடத்தை விட 11.58 சதவீதத்தினால் அதிகரித்திருந்தமையால் அதுவும் உத்தேச முறைமையின் தொடர்ச்சியான நிலவுகை தொடர்பில் பாதகமாக தாக்கம் செலுத்தியிருந்தது. மேலும், எதிர்வரும் வருடங்களில் இந்த நிலைமை தொடர்ந்தும் அதிகரிக்கக்கூடும் என்பதால் அது தொடர்பில் கவனத்தில் கொண்டு முன்மொழிவு முறைமையை மீள் கட்டமைத்து நிதி இயலுமையுடன் கூடியதாக நடைமுறைப்படுத்துவதற்கு நிறுவனம் இதுவரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விவசாய மற்றும் கடற்றொழிலில் ஈடுபடும் சமூகத்தினருக்காக புதிய ஓய்வூதிய திட்டமொன்றினை அறிமுகப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஆர்வலர் குழு 9% முதலீட்டு விகிதத்தின் கீழ் விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்கு ஓய்வூதியமொன்றினை ஒழுங்கமைத்தல் பொருத்தமானது என தீர்மானித்திருந்தது. மேலும், இந்த உத்தேச முறைமைக்காக வருமானத்தினை கணிப்பிடும் நடைமுறைமையினை ஆராய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது. பயிர்ச்செய்கை வரி நிதியம் மற்றும் கொவிசெத லொத்தர் வருமானம் ஆகியவற்றை இதற்கு ஈடுபடுத்த முடியும் என அவதானிக்கப்பட்டது.<br><br>புதிய அரசின் சௌபாக்கியமான நோக்கு கொள்கை பிரகடத்தினுள் புதிய விவசாய ஓய்வூதிய முன்மொழிவு முறைமையொன்று தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளமையால் அந்த அரச கொள்கையின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | அரச கொள்கைகளுக்கு இணங்க தொடர்ந்தியங்கும் நிலைமையுடன் புதிய கடற்றொழில் ஓய்வூதிய உத்தேச முறைமை யொன்றினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மைகள்.**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|---|
| 1990 இன் 23 ஆம் இலக்க கடற்றொழிலாளர் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்ட அதிகார சட்டம் | | | |
| (அ) 16 ஆம் பிரிவு | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக சமூக கட்டணங்களினை செலுத்துவதனை புறக்கணித்த 72 அங்கத்தவர்களின் உறுப்புரிமையை இரத்துச் செய்வதற்கு முன்னர் அது தொடர்பில் உரிய அங்கத்தவர்களை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக இரத்துச் செய்யப்பட்ட சான்றிதழொன்று மீள செல்லுபடியானதாக மாற்றுவதற்கு அங்கத்தவர்களுக்கு உள்ள உரித்து இழக்கப்பட்டிருந்தது. அங்கத்துவம் இரத்துச் செய்யப்பட்ட தேறிய தவணை மற்றும் வட்டியாக மீளாய்வாண்டின் போது ரூபா 1,293,842 தொகை மீளளிக்கப்பட்டிருந்தது. | தொடர்ச்சியாக 10 தவணைகளை செலுத்தாத பங்களிப்பாளர்களின் பங்களிப்பினை இரத்துச் செய்யப்படுகின்றமை உத்தேச முறைமைக்கு இணையும் சந்தர்ப்பத்தில் மீனவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>மேலும், அவ்வாறு அங்கத்துவம் இரத்துச் செய்யப்படுதல் தொடர்பில் அறிவுறுத்துதல் கடற்றொழில் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப் படுவதுடன் பங்களிப்பு இரத்துச் செய்யப்பட்ட மீனவர்களுக்கு கடற்றொழில் திணைக்களத்தின் மாவட்ட அலுவலகம் மூலம் புதிய பங்களிப்பாளராக மீளவும் கடற்றொழில் ஓய்வூதிய முன்மொழிவு முறைமைக்கு பங்களிக்கும் இயலுமை காணப்படுகின்றது.<br><br>மீனவர் ஓய்வூதிய உத்தேச முறைமை தொடர்பில் பொறுப்பு வாய்ந்த நிறுவனமான கடற்றொழில் | நலன்களை இழந்த சந்தர்ப்பத்தில் அது தொடர்பில் அறிவித்தலொன்று அந்த பங்களிப்பாளருக்கு வழங்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | திணைக்களத்திற்கு கணக்காய்வு ஐயவினாவில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் மீள இடம்பெறாத வகையில் நடவடிக்கை எடுக்குமாறு அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | 20 ஆம் பிரிவு | 2019 ஆம் ஆண்டிற்காக சபையின் மதியுரை செயற்குழுவின் அனைத்து அங்கத்தவர்களும் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 நவம்பர் 03 ஆந் திகதியின் பின்னர் எவ்வித கூட்டமும் நடாத்தப் பட்டிருக்கவில்லை. | கடற்றொழில் ஓய்வூதிய மதியுரை செயற்குழுவின் அங்கத்தவர்களை நியமிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதற்கும் துரிதமாக மதியுரை செயற்குழுவினை கூட்டுவதற்கும் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளது. | அங்கத்தவர்களை நியமித்து உரிய முறையில் கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறுகள் ரூபா 16,207,069 ஆன நட்டமாக இருந்ததுடன் அதனோடொத்த கடந்த வருடத்தின் இலாபம் ரூபா 2,247,550 ஆகும். அதன் பிரகாரம் நிதி பெறுபேறுகளில் ரூபா 18,454,619 ஆன வீழ்ச்சியொன்றினை அவதானிக்க கூடியதாக இருந்தது. இந்த வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டின் முதலீட்டுக்காக பெற்ற வட்டியின் சதவீதம் குறைவடைந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசு |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான உத்தேச முறைமைக்கான மொத்த பங்களிப்பு ரூபா 340,189 ஆன போதிலும், மொத்த ஓய்வூதிய கொடுப்பனவு ரூபா 63,346,699 தொகையும் தேறிய தவணை கொடுப்பனவு ரூபா 1,293,842 மற்றும் மரணமடைந்த அங்கத்தவர்களின் | தற்போது நிலவும் மீனவர் ஓய்வூதிய உத்தேச முறைமை நிதி இயலுமையுடன் கூடிய உத்தேச முறைமை அல்லாத காரணத்தினால் புதிய இணைப்புக்களை மேம்படுத்துவது இடம்பெறவில்லை எனினும், உத்தேச முறைமைக்கு பங்களித்துள்ள மீனவர்களுக்கு 60 வயது நிறைவடைந்தமையால் ஓய்வூதியத்தை பெறுவதற்கான தகைமையை பூர்த்தி செய்கின்ற காரணத்தினால் இவ்வாறு ஓய்வூதியம் செலுத்துதல் அதிகரித்து வெளியேற்றப்படும் நிதியின் அளவும் | நிதி இயலுமையுடன் கூடிய புதிய உத்தேச முறைமையொன்றை தயாரித்து புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்வதனை |

| | | | |
|---|---|---|---|
| | நலன்களை செலுத்துதல் ரூபா 368,000 ஆனமையினால் கிடைத்த பங்ககளிப்பினை விஞ்சி நிதியத்திலிருந்து ரூபா 64,668,352 தொகை உத்தேச முறைமையிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. | அதிகரித்துள்ளது. | மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 60 வயதினை பூர்த்தி செய்த நாள் முதல் ஓய்வூதியம் செலுத்தப்பட வேண்டிய போதிலும், உத்தேச முறைமையினால் அதனை தயாரித்த திகதி முதல் கொடுப்பனவுகளை மேற்கொண்டமையால் 129 மீனவர்களுக்கு உரித்துடைய ரூபா 3,940,215 தொகையான ஓய்வூதியத்தின் அளவு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அட்டுறாக்கப்பட்டிருந்தது. | நீண்டகாலமாக ஓய்வூதியத்தினை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் தாமதமடைந்துள்ள மீனவர்களுக்கு நிலுமை ஓய்வூதியத்தினை செலுத்தும் போது அவ்வாறு தாமதமடைந்ததற்கான காரணங்களை கண்டறிந்ததன் பின்னர் கொடுப்பனவினை மேற்கொள்ளும் போது பழைய நிலுவை ஓய்வூதியத்தினை செலுத்துதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்படுகின்றமையால் இந்த நிலைமை உருவாகியுள்ளது. யுத்தம் இடம்பெற்ற மாவட்டங்களின் மீனவர்கள் ஓய்வூதியத்திற்கு விண்ணப்பிக்கும் போது நீண்ட தாமதத்தினை காணக் கூடியதாக இருந்தமையால் அவ்வாறு தாமத மடைந்ததற்கான காரணத்தை கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலாளர் உள்ளடங்கலான மாவட்ட அரச உத்தியோகத்தர் களிடமிருந்து அது தொடர்பில் உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொண்டதன் பின்னர் குறித்த பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவைகள் ஏற்படாதவாறு 60 வயதினை பூர்த்தி செய்த திகதியிலிருந்து ஓய்வூதியத்தினை செலத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசு |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் 100 பங்களிப்பாளர்களினை இணைத்துக் கொள்வதன் மூலம் ரூபா 307,000 ஆன பங்களிப்புத் தொகையினை பெற்றுக்கொள்ள உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டினுள் எவ்வித அங்கத்தவர்களும் உத்தேச முறைமையினுள் இணைத்துக் | இந்த உத்தேச முறைமையினை நடைமுறைப்படுத்துதல் கடற்றொழில் திணைக்களம் மற்றும் அதனுடன் இணைந்த அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளுதல் உள்ளடங்கலான செயலாற்றல் நடைமுறைப்படுத்தப்படுவது கடற்றொழில் திணைக்களத்தினால் ஆகும். எதிர்காலத்தில் கடற்றொழில் திணைக்களம் மற்றும் அதனோடிணைந்ததாக இந்த உத்தேச | ஓய்வூதிய முறைமையின் நோக்கங்களின் பிரகாரம் அங்கத்தவர்களை தொடர்ச்சியாக இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

கொண்டிருக்கப்படாததுடன் மீளாய்வாண்டினுள் இறப்புக்கள், பல்வீனமடைதல் மற்றும் உரிய முறையில் தவணைகளை செலுத்தாமையின் அடிப்படையில் 96 அங்கத்தவர்கள் அம்முறைமையிலிருந்து நீக்கப்பட்டிருந்தனர்.

முறைமை நிதி இயலுமையுடன் கூடிய புதிய உத்தேச முறைமையாக மீள்கட்டமைப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் அதன் பிரகாரம் மிகவும் ஆக்கபூர்வமான திட்டமொன்றின் பிரகாரம் உத்தேச முறைமையினை எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

உரிய முறையில் தவணைகளை செலுத்தாத மீனவர்களுக்கான உத்தேச முறைமையிலிருந்து அகற்றப்படுகின்றமை அவர்கள் இணைத்துக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், மரணமொன்று அல்லது அங்கவீனமொன்று ஏற்படுமாயின் மரண பணிக்கொடை ஊனமுற்றமைக்கான நலனினை வழங்கும் முன்மொழிவுகள் இம்முறைமையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.